## பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்துச் செய்திருப்பதை சோபா மாடல் அரசு கைவிட்டு தமிழ்நாட்டின் வளர்ச்சி

# இளைஞர்களின் எதிர்காலம் கருதி பணிகளைத் தொடர வேண்டும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஆக. 25-**

**பரந்தூர் விமான நிலைய திட்டம் ரத்து குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான பரந்தூர் விமான நிலையத்திட்டத்தை ரத்து செய்திருக்கும் Sofa Model அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சென்னையில் பெருகி வரும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் விமான சரக்கு போக்குவரத்து எதிர்காலத் தேவை போன்றவற்றின் அடிப்படையில், சென்னைக்கு 2ஆவது விமான நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து, பரந்தூர் விமான நிலையத் திட்டம் கழக அரசால் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு Airports Authority of India, Union Civil Aviation Ministry உள்ளிட்டவை ஆய்வு செய்து, அனுமதி தந்து விட்டன.

இத்தகைய கடினமான அனுமதி

களைப் பெறுவது, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குச் சந்தை மதிப்பை விட 3 மடங்கு அதிகமான இழப்பீடு, மறு குடியமர்வு போன்ற முக்கியமான பணிகள் அனைத்தும் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே நடைபெற்றன.

இதற்காக அரசுத் தரப்பில் பெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவையெல்லாம் நடந்த பிறகு, அற்ப அரசியல் காரணங்களுக்காக திட்டத்தையே கைவிடுகிறேன் என்று சொன்னால், அது அரசிற்கு பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தும்.

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை நிறுத்துவதால், சென்னையை சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கி வெளியேறும் அபாயமும், புதிய நிறுவனங்கள் சென்னைக்கு வர தயங்கும் சூழலும் எழுந்துள்ளன.

ஆகவே, தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தையும் தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, பரந்தூர் விமான நிலைய பணிகளைத் தொடர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். #ParandurAirport

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# அயப்பாக்கம் துரை வீரமணி இல்ல மணவிழா வரவேற்பு! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பங்கேற்பு!

*சென்னை, ஆக. 25 -* சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி - வீர.கனிமொழி ஆகியோரின் புதல்வி வீர.குடியரசிக்கும், சென்னை, ஜி.ராஜசேகர் - ஆர்.பூங்கோதை ஆகியோரின் புதல்வர் ரா.கார்த்திகேயனுக்கும் திருமண வரவேற்பு விழா நாளை (26.08.2026 - புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை, வானகரம், ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு விழாவில் ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் துரை வீரமணி வரவேற் புரை ஆற்றுகிறார்.

சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, முன்னாள் அமைச்சர் பா.பெஞ்சமின், மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வே.ராஜன் எம்.சி, மாவட்டப் பொருளாளர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி, எஸ்.அருணாச்சலம், சைதை மா.அன்பரசன், ராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, ஜெ. ஞானப்பிரகாசம், என்.இ.கே.மூர்த்தி, ஏ.ஜெ. பவுல், அடையாளம்பட்டு ஏ.ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமண வரவேற்பு விழாவில் கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், சட்டமன்றத் எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழா வரவேற்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், முன்னாள் அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பி.கே.சேகர்பாபு, தா.மோ. அன்பரசன், முனைவர் கோ.வி.செழியன் மற்றும் முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் எம்.பி, இரா. கரிராஜன் எம்.பி, அன்பகம் கலை, ஐ.பரந்தாமன், ப. தாயகம் கவி, பூச்சி எஸ். முருகன், எஸ்.ஆர்.ராஜா, நே.சிற்றரசு, ஆர்.டி.சேகர், ஆ.கிருஷ்ணசாமி, இ.கருணாநிதி, ஆர்.பத்மநாபன், மேயர் பிரியா ராஜன், மேயர் ஜி.உதயகுமார், துணை மேயர் மு.மகேஷ்குமார், பிரபு கஜேந்திரன், எஸ்.ஜோயல், வி.பி.ஆர். இளம்பரிதி, பொன்.தனபால், திருத்தணி எஸ்.சந்திரன், வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், டி.ஜெ.எஸ். கோவிந்தராஜ், வி.ஜி. ராஜேந்திரன், ப.ரங்கநாதன், எஸ்.அரவிந்த்ரமேஷ், ஜோசப் சாமுவேல், கே.பி.பி.சங்கர், ஏ.எம். வி.பிரபாகர்ராஜா, காசி முத்து மாணிக்கம், பி.டி. பாண்டிசெல்வம், க.தனசேகரன் எம்.சி, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி மு.மணிமாறன் எம்.சி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பா.வாசுகி பாண்டியன், என்.தனசேகரன், தமிழன் பிரசன்னா, துணை மேயர் கோ.காமராஜ், படப்பை ஆ.மனோகரன், எஸ்.பத்மப்ரியா, சி. ஜெரால்டு, நடுக்குத்தகை கே.ஜெ.ரமேஷ், பி.கே. மூர்த்தி எம்.சி, பி.ஜெ. மூர்த்தி மற்றும் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இரா.வினோத் எம்.சி, ஏ.எம்.யுவராஜா, பி.கதிர் வேல், டி.கதிரவன் ஆகியோர் மணவிழா வரவேற்புக்கு வருகை தரும் அனைவரையும் வரவேற்கின்றனர்.

வீர.தமிழரசன் (எ) யோகிராம் நன்றி கூறுகிறார்.

# கழக அரசின் 100 நாள் சாதனைகளும் விஜய் அரசின் 100 நாள் காட்சியும் !

2021-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மே 7-ம் தேதி பொறுப்பேற்ற 100 நாள் ஆட்சி என்ன செய்தது, 2026-ல் விஜய் அவர்களின் 100 நாள் ஆட்சி என்ன செய்கிறது என்று பாருங்கள். உண்மை உங்கள் கண் முன்னே!

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் - சொன்னதை செய்தவர்:**

முதல் நாள் 5 கையெழுத்து - 5-ம் சாதனை!

1. கொரோனா நிவாரண நிதி ரூ.4000 - 2.10 கோடி குடும்பங்களுக்கு இரண்டு தவணையாக வழங்கினார்.

2. ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைத்தார்.

3. மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் - இன்று வரை 500 கோடி பயணங்களை தாண்டி சாதனை.

4. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டை விரிவாக்கம் செய்தார்.

5. தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை கட்டணத்தை அரசே ஏற்றது.

**100 நாட்களில்:**

6. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை - பிரச்சாரத்தில் பெற்ற 4.57 லட்சம் மனுக்களில் 2.30 லட்சம் மனுக்களுக்கு 100 நாட்களிலேயே தீர்வு.

7. பெட்ரோல் விலை ரூ.3 குறைப்பு.

8. மக்களை தேடி மருத்துவம் திட்டம் கிருஷ்ணகிரியில் தொடக்கம்.

9. அரசுப்பள்ளி மாணவர்களுக்கு பொறியியல், வேளாண்மையில் 7.5% இட ஒதுக்கீடு.

10. 14 மளிகை பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்பு.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொன்னார்: செய்தார்.

**விஜய் - சொன்னதை செய்தாரா??**

1. 6 சிலிண்டர் என்றவர் 3 ஆக்கினார்: எல்லா பெண்களுக்கும் என்றவர், இப்போது ஆண்டுக்கு ரூ.2.5 லட்சம் வருமானத்திற்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும். திட்டத்தில் 50% வெட்டு.

2. 200 யூனிட் இலவசம் என்றவர் நிபந்தனை வைத்தார்: 500 யூனிட்டுக்கு கீழ் பயன்படுத்தினால் மட்டும் 200 யூனிட் இலவசம். மேல் பயன்படுத்தினால் பழைய 100 யூனிட் தான். 2.30 கோடி இணைப்புகளில் பல லட்சம் பேருக்கு ஏமாற்றம்.

3. 5 ஏக்கர் வரை கடன் தள்ளுபடி என்றவர் தொகைக்கு வரம்பு வைத்தார்: லட்சக்கணக்கான விவசாயிகள் ஏமாற்றம்.

1. தங்க மோதிரம் - மிகப்பெரிய ஏமாற்று:

"பிறக்கும் எல்லா குழந்தைக்கும் தங்க மோதிரம்" என்றார். இப்போது "அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைக்கு மட்டும் தான்" என்று மாற்றிவிட்டார். தமிழகத்தில் பிறக்கும் 10 லட்சம் குழந்தைகளில் 55% தனியார் மருத்துவமனையில் பிறக்கிறார்கள். அவர்களை கழித்து விட்டார்.

**சைதை சாதிக்**
(கழக செய்தி தொடர்பாளர்)

இது அரைகுறை அல்ல, முழு ஏமாற்று!

2. தங்கம் + பட்டுப்புடவை - விதிமுறைகளின் மலை:

"திருமணமாகும் எல்லா பெண்களுக்கும் 1 சவரன் தங்கம் + பட்டுப்புடவை" என்றார். இப்போது ஏகப்பட்ட விதிமுறைகள்:

- வருமான வரம்பு ரூ.2.5 லட்சத்திற்குள்
- பிறப்பிட சான்று கட்டாயம்
- திருமண சான்று கட்டாயம்
- 10-க்கும் மேற்பட்ட ஆவணங்கள்

ஆண்டுக்கு 6 லட்சம் பெண்களில் 4 லட்சம் பேருக்கு மறுப்பு. பயனாளிகள் 70% கடுமையாக குறைப்பு!

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 100 நாள் - சாதனைக்கு சாட்சி!

விஜய் 100 நாள் - அரைகுறை ஆட்சிக்கு சாட்சி!

வாக்குறுதியில் "எல்லோருக்கும்" என்று சொல்லி ஓட்டு வாங்கி, நடைமுறையில் "தகுதியுள்ளவர்களுக்கு மட்டும்" என்று ஏமாற்றுவது தான் விஜய் ஆட்சி!

வாக்குறுதி கொடுத்து ஓட்டு வாங்குவது அரசியல், சொன்னதை செய்வதுதான் ஆட்சி - அதை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்து காட்டினார்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த வி. ஹரிஹரசுதன் மகன் சைலேஷுக்கு ரூ.25 ஆயிரம் கல்வி உதவித் தொகைக்கான காசோலை வழங்கியதை முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே. சுரேஷ்குமார் முன்னிலையில் வழங்கினார். உடன் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம். உதயகுமார், ஆர்.சிபி சக்கரவர்த்தி, ஏ.கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விபத்தில் காயமடைந்த திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜேஷ் குமாருக்கு ரூ.25 ஆயிரம் மருத்துவ உதவித்தொகைக்கான காசோலை வழங்கியதை மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மா.கிரண் முன்னிலையில் வழங்கினார் உடன் நகரச் செயலாளர் வி.வினோத் குமார் நகர நிர்வாகிகள் கணேசன், அசோக்குமார், சித்திக் அலி, நகர அமைப்பாளர் சதீஷ் உள்பட நிர்வாகிகள் உள்ளனர்

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மத்திய ஒன்றியம் செஞ்சி கிளை பிரதிநிதி ஸ்ரீதர் – ரம்யா இல்ல விழா நடைபெற்றது இதில் முன்னாள் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி. ஜி. ராஜேந்திரன், கலந்துகொண்டு வாழ்த்தினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பிரகாஷ்ஞானஒளி, மோ.ரமேஷ், நிர்வாகிகள் சேகர், பெருமாள், ஆனந்த், வாசு, பிரியாங்குப்பம் டி.ராஜன், முனுசாமி, மணி, பலராமன், டேவிட், கிரிதரன், கஜேந்திரன், லட்சுமணன், நடராஜ், குமார், சுகுமார், பிரவீன், காட்வின் உள்பட பலர் உள்ளனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பி.ஜி. அவினாஷ் – டி.விஷ்னுபிரியா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக மாநில இளைஞரணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதி செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஜி.ஆர்.மணிவண்ணன், கேபிள் த.வேல்கணேசன், வட்ட கழக செயலாளர் கேபிள்டிவி ராஜா, மாவட்ட பிரிதிநிதி பி.எஸ்.சைலஸ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் மணலி எஸ்.ஸ்டாலின், ஸ்ரீ சரவணன், ஆர்.எம்.மணிகண்டன், கே.டி.ஆர்.பாலமுருகன், கே.மோகன்ராஜ், கே.பி.எஸ்.ரஞ்சித்குமார், ஹரிபிரசாத், மு.மனோஜ்(எ)தமிழ்மாறன், எம்.எஸ்.மணிகண்டன், ஆர்.ரூபேஷ், ஆர்.எல்.பிரபு, சி.ஜெயபிராகஷ், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எஸ்.சதிஷ், மோகன், எம்.ஆகாஷ், ஆர்.ஹரிஷ், கணேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.